பாடசாலையின் பெயர்

பாடசாலைத் தொலைபேசி இலக்கம்

மாணவ-மாணவியினது பெயர்

பாடத்தின் பெயர்

அன்புடைய பெற்றோர்கள்/பராமரிப்பாளர்களுக்கு

சமீப காலத்தில், மேலே சொல்லப்படுள்ள பாடத்தில் உங்களுடைய பிள்ளையின் கடின உழைப்பும், பங்குபற்றலும் அபாரமானதாக இருந்துவந்திருக்கிறது. அவருடைய பற்றுறுதி மற்றும் அர்ப்பணிப்பின் அளவு என்னை மிகவும் ஈர்த்துள்ளது.

உங்களுடைய பிள்ளை கடமையுணர்ச்சி கொண்ட ஒரு மாணவர், மற்றும் இந்த நடத்தைப்பாங்கும், அணுகுமுறையும் மகிழ்வூட்டும் பலன்களைப் பெற உதவும்.

அனைத்து வகுப்புப் பாட வேலைகளையும், வீட்டுப் பாட வேலைகளையும் பூர்த்தி செய்யவும், வகுப்பறைக் கலந்துரையாடல்களில் அர்த்தமுள்ள விதத்தில் பங்களிப்பு செய்யவும் உங்களுடைய பிள்ளை தொடர்ந்தும் முயற்சிகளை மேற்கொண்டுவருகிறார்.

அவருக்குப் போதிப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

உங்களுடைய பிள்ளையினது முயற்சிகளுக்காக அவருக்கு வாழ்த்துத் தெரிவியுங்கள், மற்றும் அவர் செய்துவரும் நல்ல முயற்சிகளை தொடர்ந்து செய்துவருமாறு அவரை ஊக்குவியுங்கள்.

உங்களுக்குக் கேள்விகள் ஏதும் இருந்தால் என்னுடன் தொடர்புகொள்ளத் தயங்காதீர்கள். உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவ மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் தேவைப்பட்டால், 131 450 -இல் ‘தொலைபேசி மொழிபெயர்த்துரைப்பாளர் சேவை’யை அழைத்து உங்கள் மொழியில் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேளுங்கள். பாடசாலையின் தொலைபேசி இலக்கத்தினைத் தொலைபேசி இயக்குநருக்குத் தாருங்கள், அதையடுத்து உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவரை அவர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.

உங்கள் உண்மையுள்ள

ஆசிரியரது கையொப்பம்

ஆசிரியரது பெயர்

திகதி